RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar MBBS MS DNB MCH (vascular) 98410 25996 — Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari MS (Opthal) DO MBA 9444 288784 — Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar MBBS MS FMAS 9445 401793 — Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R MBBS MS MCH (vascular) 9884 650945 — Sr Vascular Surgeon
Dr Salins R MBBS MD 87780 87742 — General Physician
Dr Praveena E MBBS MS (ENT) 9944 100443 — Sr ENT Surgeon

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

# கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பயணிகளை ஏற்றுவதில் பஸ் டிரைவர்கள் மோதல்



சென்னை – 3 நவம்பர், 2026 சென்னை வண்டலூர் அருகே ஊரப்பாக்கம் ஜிஎஸ்டி நெடுஞ்சாலை ஓரத்தில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. இங்கு வட மற்றும் தென்மாவட்டங்களுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான அரசு பேருந்துகள், விரைவு பேருந்துகள் மற்றும் ஆம்னி பேருந்துகள் சென்று வருகின்றன. இதேபோல் சென்னை, செங்கல்பட்டு உள்பட பல்வேறு புறநகர் பகுதிகளில் இருந்து மாநகர பேருந்துகளும் வந்து செல்கின்றன.

இந்நிலையில், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இன்று காலை 6வது நடைமேடை மற்றும் 7வது நடைமேடையில் அரசு பேருந்துக்கு காத்திருந்த ஏராளமான பயணிகளை, திருவண்ணாமலைக்கு செல்லும் அரசு பேருந்துகளின் டிரைவர்கள் போட்டி போட்டு அழைத்தனர். இதனால் இருதரப்பு அரசு பேருந்து டிரைவர்களுக்கு இடையே வாக்குவாதம் முற்றியதில் கைகலப்பு மற்றும் மோதல் ஏற்படும் சூழல் ஏற்பட்டது. பின்னர் சக அரசு பேருந்து டிரைவர்கள் ஓடிவந்து, வாக்குவாதத்தில் ஈடுபட்ட டிரைவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.